கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – முன்னாள் அமைச்சர்

கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் இல்லத் திருமண விழா!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை!

சென்னை. அக்.24 -

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் - முன்னாள் அமைச்சரும் விருதுநகர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் கழக மூத்த முன்னோடியுமான கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ. அவர்கள் இல்ல மண விழாவை நாளை (25 ஆம் தேதி - ஞாயிற்றுக்கிழமை) காலை, சென்னை - திருவான்மியூரில் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

மண விழாவிற்கு கழக இளைஞரணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகிக்கிறார்.

மணவிழாவிலும் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சியிலும் முன்னாள் அமைச்சர்கள் - மாவட்டச் செயலாளர்கள் - சட்டமன்ற - நாடாளுமன்ற முன்னாள் - இந்நாள் உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் எனப் பலரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

இம்மணவிழா பற்றிய விவரம் வருமாறு:-

முன்னாள் அமைச்சரும், விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளருமான கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் – திருமதி ஆர்.ஆதிலட்சுமி ஆகியோரின் மகள் வழிப் பேரனும் – டாக்டர் பா. அருண் குமார் – உமா மகேஸ்வரி ஆகியோரின் புதல்வருமான ஏ.வைஷ்ணவிற்கும் – திருநெல்வேலி சரவணன் – திருமதி விஜயசங்கரி ஆகியோரின் புதல்வியான எஸ்.விகாஷ்னிக்கும் திருமண விழா நாளை (25.10.2026 – ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் சென்னை – திருவான்மியூரில் அமைந்துள்ள இராமச்சந்திரா கன்வென்ஷன் ஹாலில் நடைபெறுகிறது.

மணவிழாவில் முன்னாள் அமைச்சரும் விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளருமான தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ. வரவேற் புரையாற்றுகிறார்.

இத்திருமண விழாவினை கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து – மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

மணவிழாவிற்கு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகிக்கிறார்.

மணவிழாவில் – கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் கே.என். நேரு எம்.எல்.ஏ., கழகத் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி., மு.க. தமிழரசு, துணைப் பொதுச்செயலாளர்கள் ஐ.பெரியசாமி எம்.எல்.ஏ., க. பொன்முடி, ஆ.ராசா எம்.பி., அந்தியூர் செல்வராஜ், திருச்சி என்.சிவா எம்.பி., மு.பெ.சாமிநாதன் திருவண்ணாமலை தெற்கு மாவட்டச் செயலாளர் எ.வ.வேலு எம்.எல்.ஏ., கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., கழக உயர் நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, தேசிய முற்போக்கு திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ., மக்கள் நீதி மையம் கட்சித் தலைவர் கலைஞானி கமல் ஹாசன் எம்.பி., கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் ஈ.ஆர். ஈஸ்வரன், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., மனிதநேய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் தமிமுன் அன்சாரி எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மேலும் இம்மண விழாவில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சு.முத்துசாமி, கே.ஆர்.பெரியகருப்பன், கோவி.செழியன், அர.சக்கரபாணி, வி. செந்தில்பாலாஜி, அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன், எஸ்.எஸ்.சிவசங்கர், ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன், தா.மோ.அன்பரசன், பி.கே.சேகர்பாபு, பி.மூர்த்தி, சிவ.வீ. மெய்யநாதன், பி.கீதாஜீவன், டி.ஆர்.பி. ராஜா, சி.வெ.கணேசன், த.மனோ தங்கராஜ், பி.டி.ஆர்.பழனிவேல் தியாக ராஜன், க. ராமச்சந்திரன், சேலம் இரா.இராஜேந்திரன், அன்பில் மகேஸ் பொய்யா மொழி, மா. சுப்பிரமணியன், கே.எஸ்.மஸ்தான், சா.மு. நாசர், கயல்விழி செல்வராஜ், ம.மதிவேந்தன், ஆர்.காந்தி ஆகியோரும்,

பொன்.முத்து ராமலிங்கம், சுப.தங்க வேலன், மு.கண்ணப்பன், பொங்கலூர் ந. பழனிசாமி, எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், ஏ.கே.எஸ்.விஜயன், கே.சி.பழனிசாமி, எல்.மூக்கையா, தி.அ.முகமது சகி, எம். கந்தசாமி, வாகை சந்திரசேகர், உ.மதிவாணன், திண்டுக்கல் ஐ.லியோனி,

கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் எஸ்.ஆஸ்டின், ப.தாயகம் கவி, தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன், அண்ணா அறிவாலயம் பொது மேலாளர் ஆர். பத்மநாபன், பொன் தனபால், மற்றும் மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற – நாடாளுமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், பல்வேறு கழக அணிகளின் செயலாளர்கள் – என கழக முன்னோடிகள் ஏராளமானோர் கலந்துகொண்டு வாழ்த்து கின்றனர்.

விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. நன்றி கூறுகிறார்.

முன்னதாக இன்று (24.10.2026 – சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நடை பெறுகிறது.



கடந்த ஆண்டு 'பசுமை தூத்துக்குடி' சார்பில் கங்கா பரமேஸ்வரி நகர் பகுதியில் நடப்பட்ட சுமார் 800 மரக்கன்றுகளின் வளர்ச்சியை கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. பார்வையிட்டார். இதில் தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி உள்ளிட்டோர் இருந்தனர்.

புதிய தலைமைச் செயலகம் இடத்தை தேர்வு செய்தது யார்?

தமிழ்நாட்டின் முதலமைச்சர் விஜய்யா? இல்லை ஜோதிடரா?

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கேள்வி!



சென்னை, அக்.24-

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

புதிய தலைமைச் செயலகத்திற்கு பட்டினப்பாக்கத்தில் இடம் தேர்வு செய்ததற்கான ஆய்வு விவரங்கள் தங்களிடம் இல்லை என்று RTI மூலம் எழுப்பிய கேள்விக்கு த.வெ.க. அரசு பதிலளித்திருக்கிறது.

அப்படியென்றால், இடத்தைத் தேர்வு செய்தது யார்? முதலமைச்சர் @TVKVijayHQ அவர்களா? இல்லை ஜோதிடரா? தமிழ்நாட்டில் நடப்பது மக்கள் ஆட்சியா, ஜோதிடர் ஆட்சியா?.

இவ்வாறு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மாற்றுத் திறனாளிகளுக்கான ஆசிய பேட்மிண்டன் கலப்பு இரட்டையர் போட்டியில் இந்தியாவுக்கு வெண்கலம்!

தமிழ்நாட்டு வீராங்கனை தங்கை மனிஷா ராமதாசுக்கு பாராட்டுகள்!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, அக். 24-

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

ஜப்பானில் நடைபெற்று வரும் மாற்றுத் திறனாளிகளுக்கான 5வது ஆசியன் பேட்மிண்டன் விளையாட்டில் Mixed Doubles SL3 SU5 பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற இந்திய அணிக்கும், அதில் இடம்பெற்ற தமிழ்நாட்டு வீராங்கனை தங்கை மனிஷா ராமதாசுக்கும் என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



தமிழ்நாட்டு பாரா விளையாட்டு வீரர்கள் சர்வதேச அளவிலான போட்டிகளில் வெற்றி பெற வேண்டும் என்று நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி னோம்.

அதன் விளைவாகவும் தங்களின் விடாமுயற்சியாலும் திறமையாலும் தங்கை மனிஷா, தம்பி சிவராஜன் சோலைமலை, தங்கை கஸ்தூரி ராஜாமணி, தம்பி ஜெயான் டொரப் மதன், தங்கை சஹானா ரவி போன்ற நம் மாற்றுத்திறன் வீரர்கள் Asian Para Games இந்தியாவுக்காக பல்வேறு பதக்கங்களைக் குவித்துள்ளனர்.

மற்றவர்களுக்கு தன்னம்பிக்கை அளிக்கும் வகையில் சாதனை களைச் செய்து வரும் மாற்றுத் திறனாளி வீரர்களின் வெற்றி தொடரட்டும். அன்பும், வாழ்த்தும்.

இவ்வாறு அப்பதிவில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப் பிட்டுள்ளார்.

டம்மி த.வெ.க. ஆட்சியில்

பச்சை குழந்தைகளுக்கும் பாதுகாப்பில்லை!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, அக்.24-

செஞ்சியில் 7 வயது சிறுமி காணாமல் போய் 11 நாட்கள் ஆகிவிட்டன. இராணிப்பேட்டையில் ஒருமாதமாக காணாமல் போன குழந்தை ஒன்று கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில், டம்மி த.வெ.க. ஆட்சியில் பச்சை குழந்தைகளுக்குக் கூட பாதுகாப்பு இல்லை என்று, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அவரது பதிவு வருமாறு:-

செஞ்சி அருகே 7 வயது சிறுமி காணாமல் போய் இன்றோடு 11 நாட்கள் ஆகியும், அச்சிறுமியை கண்டுபிடிக்க முடியாமல் இந்த அரசு



திணறிக்கொண்டு இருப்பது கடும் கண்டனத்துக்குரியது.

குழந்தையைக் கண்டுபிடிக்காத அரசையும் காவல்துறையையும் கண்டித்து தி.மு.கழகம் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தரணி வேந்தன் தலைமையில் செஞ்சி ஆலம்பூண்டியில் நேற்று (22.10.2026) கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இராணிப்பேட்டையில் கூட இதே போல ஒரு குழந்தை காணாமல் போய் சுமார் ஒரு மாதம் ஆகியும் இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை.

இந்த டம்மி ஆட்சியில் பச்சை குழந்தைகளுக்கு கூட பாதுகாப் பில்லை என்ற நிலையில் தான் தமிழ்நாடு இருக்கிறது.

முதலமைச்சர் தன் Reels மோகத் தைத் தள்ளி வைத்துவிட்டு, பிள் ளையை தொலைத்துத் தவிக்கும் அந்தக்குடும்பத்தின் வலியை உணர்ந்து, காணாமல் போன குழந்தையை உடனே கண்டறிய ஆக்கப்பூர்வமான நடவடிக்கை களை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

திருப்பத்தூரில் இன்று

மருதுபாண்டியர்கள் 225-ஆவது குருபூஜை!

மாவட்டக் கழகத் தோழர்களுக்கு முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வேண்டுகோள்!

சிவகங்கை. அக். 24 -

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் மாமன்னர் மருது பாண்டியர்கள் 225வது ஆண்டு குருபூஜை நடைபெறுகிறது. சிவகங் கையை தலைநகராக கொண்டு ஆட்சி புரிந்தவர் கள் மாமன்னர் மருது பாண்டியர்கள். பெரிய மருது சின்ன மருது என்று அழைக்கப்பட்ட இவர் கள் மருது சகோதரர்கள். இவர்கள் நாட்டின் சுதந் திர போராட்டத்திற்காக ஆங் கி லே யர் க ளை எதிர்த்து. பல்வேறு போராட்டங்களை நடத் தியவர்கள்.

ஆங்கிலேயர்கள் மருது சகோதரர்களை சிறைபி டிக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டும் அவர் களை சிறைபிடிக்க முடிய வில்லை. மாமன்னர் மருது பாண்டியர்கள் ஆங்கிலேயர்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கி னார்கள். பல்வேறு திட் டங்களை தீட்டியும் ஆங்கி லேயர்கள் மாமன்னர் மருது பாண்டியர் களை உயிருடன் பிடிக்க முடிய வில்லை. இறுதியில் ஆங்கி லேயர்கள் மாமன்னர் மருது பாண்டியர்களை உயிருடன் பிடிக்க திட்ட மிட்டு மருது பாண்டியர் கள் சரண் அடையாவிட் டால் அவர்களால் காளையார் கோவில் ராஜ கோபுரத்தை பீரங்கி வைத்து தகர்க்கப்படும் என்று அறிவித்தார்கள்.



இதைக் கேள்விப்பட்ட மாமன்னர் மருது சகோத ரர்கள் திருப்பத்தூரில் ஆங் கிலேயர்களிடம் சரண் அடைந்தார்கள். அவ்வாறு சரண் அடைந்த மருதிருவ ரிடம் ஆங்கிலேயர்கள் அவர்களின் இறுதி விருப் பம் என்ன என்று கேட்ட பொழுது தங்களால் தான மாக அளிக்கப்பட்ட நிலம், இடங்கள் காளை யார் கோவில் சொர்ணகா ளீஸ்வரர் ஆலயம், ராஜ கோபுரம் ஆகியவற்றை இடிக்கக் கூடாது என்று. கூறினார்கள். மேலும் காளையார் கோவில் காளீஸ்வர ஆலயம் முன் பாக தங்களது தலையை அடக்கம் செய்ய வேண் டும் என்று கோரிக்கை வைத்தனர்.

அவர்களின் கோரிக் கையை ஆங்கிலேயர்கள் ஏற்று மாமன்னர் மருது பாண்டியர்கள் இருவரை யும் தூக்கில் போடுமாறு உத்தரவிட்டார்கள். இதில் மருது சகோதரர்களின் உடல் திருப்பத்தூரிலும், தலை காளையார் கோவி லிலும் 224 ஆண்டுகளுக்கு முன் அடக்கம் செய்யப் பட்டது. அதனை ஒட்டி ஒவ்வொரு ஆண்டும் அக் டோபர் மாதம் 24ஆம் தேதி மாமன்னர் மருது பாண்டியர்கள் தூக்கிலி டப்பட்ட நாள் குருபூஜை தினமாக நடைபெற்று வருகின்றது. இந்த ஆண்டு இன்று (24ம்தேதி) 225வது ஆண்டு குரு பூஜையினை முன்னிட்டு சிவகங்கை மாவட்ட தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமையில் மாமன்னர் மருது பாண்டியர்கள் நினைவிடத்திலும், மருதுசகோதரர்கள் தூக்கி லிடப்பட்ட பேருந்து நிலையம் அருகில் கழக நிர்வாகிகள் மலர் அஞ்சலி செலுத்துகிறார்கள். அத னைத் தொடர்ந்து அன்ன தானம் நடைபெறுகிறது. முன்னதாக திருப்பத்தூர் அண்ணா சிலையிலிருந்து முன்னாள் அமைச்சர் மாவட்ட கழகச் செயலா ளர் கே.ஆர்.பெரியகருப் பன் தலைமையில் ஊர்வ லமாக சென்று நினை வஞ்சலி செலுத்துகி றார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகி கள், செயற்குழு பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன் றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொள் ளுமாறு முன்னாள் அமைச் சர் மாவட்ட கழக செய லாளர் கே.ஆர்.பெரிய கருப்பன் அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நீளம் தாண்டுதலில் சாதனை படைத்து

தங்கம் வென்ற சோலைராஜ் தர்மராஜுக்கு வாழ்த்து!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பதிவு!





சென்னை.அக்.24-

நீளம் தாண்டுதலில் சாதனை படைத்து தங்கப்பதக்கம் வென்ற சோலைராஜ் தர்மராஜுக்கு வாழ்த்து தெரிவித்து, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட் டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:

ஜப்பானில் நடைபெற்ற 5-வது ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிக ளில் (Asian Para Games), ஆண்களுக் கான நீளம் தாண்டுதல் (T44/T62/T64) பிரிவில், 7.15 மீட்டர் தூரம் தாண்டி புதிய ஆசிய சாதனையுடன் தங்கப் பதக் கம் வென்ற சோலைராஜ் தர்மராஜுக்கு மனமார்ந்த வாழ்த்துகள்.

கடந்த #AsianParaGames2022 போட்டியில் அவர் 6.80 மீட்டர் தூரம் தாண்டி சாதனை படைத்திருந்தார் என் பது குறிப்பிடத்தக்கது.

அவரது இந்தச் சிறப்பான சாதனை யைப் பாராட்டி, நமது தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை யிலான திராவிட மாடல் அரசு, அவருக் குத் தேவையான பல்வேறு நிதி உதவி களை வழங்கியது.

தற்போது, அவர் தனது முந்தைய சாதனையைத் தானே முறியடித்து, புதிய மைல்கல்லை எட்டியுள்ளார்.

அவர் தொடர்ந்து பல சாதனைக ளைப் படைத்து, நமது நாட்டிற்கும் தமிழ்நாட்டிற்கும் மேலும் பெருமை சேர்க்க வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.